**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**

முன்னிலை : திரு **K. ராஜேஷ்கண்ணன்.,B.A.,B.L.,**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, மயிலாடுதுறை
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி(முழுக்கூடுதல் பொறுப்பு)

-------

2022-ம் ஆண்டு ஜூலை மாதம் 14-ம் நாள் வியாழக்கிழமை
திருவள்ளுவராண்டு 2053, சுபகிருது வருடம் ஆனி மாதம் 30-ம் நாள்

------

**அசல் வழக்கு எண்.131/2019-ல் இடைமனு எண்.01/2021**
**CNR No. TNNGO60002172019**

1. B. விமலா
2. R. பாலகிருஷ்ணன் ...மனுதாரர்கள்/ வாதிகள்

...எதிர் ....

1. A. தெஷ்ணாமூர்த்தி
2. D. வினோத் என்கின்ற ராமநாதன் ...எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

இம்மனு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 07.07.2022 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு B. ரெங்கராஜு அவர்களும், 1,2ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு A. ராம்குமார் அவர்களும் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகளைக் கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள்வரையில் என்னுடைய பரிசீலனையில் வைக்கப்பட்டிருந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவு**

இம்மனுவில் கண்டுள்ளவாறு வழக்குரையை திருத்தம் செய்ய அனுமதிக்க கோரி மனுதாரர்கள் /வாதிகளால் இம்மனு உ.வி.மு.ச. கட்டளை 6, விதி 17 - ன்படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுவின் சுருக்கம்**

மனுதாரர்கள் அசல் வழக்கின் வாதிகள். தாவா "சி" அட்டவணைச் சொத்தில் உள்ள சந்துப்பகுதி மனுதாரர்கள்/வாதிகளுக்கு அனுபவமும், உரிமையும் உள்ள சொத்து. தாவா "சி" அட்டவணைச் சொத்தில் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எந்தவித உரிமையும், அனுபவமும் இல்லை என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்கள் இருவரும் மிகவும் வயதானவர்கள், மூத்த குடிமக்கள். மனுதாரர்களின் மகன் சென்னையில்

இருப்பதால் அங்கு சென்றுவிடுவார்கள். மனுதாரர்கள் சென்னை சென்றபொழுது 20.12.2019 அன்று எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதி "சி" அட்டவணைச் சொத்தில் ஆழ்துளைகிணறு பைப்பை பூமியில் அமைத்து மின்மோட்டார் பொறுத்தியுள்ளனர். மேலும் அதிலிருந்து தண்ணீர் எடுக்க பிஸ்டன் பம்ப் மேல் பகுதியில் அமைத்துள்ளனர். இவைகளை தவிர எதிர்மனுதாரர்கள் புதிய வீட்டின் முதல் மற்றும் தரை தளத்தில் சன்ஷேட் அமைத்து உள்ளதால் முதல் தளத்தில் 5 சன்டஷேடுகளும், தரை தளத்தில் 4 சன்ஷேடுகளும் மனுதாரர்கள்/வாதிகளின் தாவா "சி" அட்டவணைச் சந்து பகுதியின் மேல் சுமார் 2x5 அடி அளவுகள் கொண்ட சன்ஷேடுகளை நீட்டி மனுதாரர்களின் சந்து பகுதியின் மேல் அமைத்துள்ளனர் இது சட்டப்படி தவறாகும். மேலும் எதிர்மனுதாரர்கள் தாவா "சி" அட்டவணைச் சொத்திற்கு கிழக்கில் அவர்களது வீட்டின் கொல்லைப்பகுதியில் சுவரில் வடக்கு-தெற்காக ஒரு வழி சுமார் 4- 1/2 x 3 அடி அளவு உள்ள புதிய கேட் அமைத்துள்ளனர். இது சந்து பகுதி தாவா "சி" அட்டவணை சொத்திற்கு வரும் வாய்ப்பாக உள்ளது. சந்து பகுதி "சி" அட்டவணை சொத்தில் எதிர்மனுதாரர்களுக்கு எந்தவித உரிமையும், அனுபவமும் இல்லாததால் இந்த புதிய கேட்டை மனுதாரர்களின் சந்துப்பகுதியில் அமைப்பதற்கு எதிர்மனுதாரர்களுக்கு உரிமை இல்லை. ஆகையால் வழக்கு நிலுவையில் இருக்கும்போது எதிர்மனுதாரர்கள் தாவா "சி" அட்டவணைச் சொத்தில் தற்காலம் ஏற்படுத்திய அமைப்புகளையும் அடைத்து, ஆழ் கிணறு மோட்டார் மற்றும் மேல் மோட்டார், சந்துவழி இவைகளை எடுக்க வேண்டுமென செயல்உறுத்துக்கட்டளை எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது பரிகாரம் கேட்பதற்காக இம்மனுவில் கண்டுள்ளவாறு வழக்குரையை திருத்தம் செய்ய வேண்டியது அவசியமானது. அதன் பொருட்டு மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனுவை அனுமதிக்க வேண்டும்.

3. **2-ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு 1-ம் எதிர்மனுதாரரால் தன்னுடையதாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்**

மனு சட்டப்படியும், நியாயப்படியும் சரியல்ல. மனுவை எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்ய வேண்டும். அசல் வழக்கில் 2-ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையிலேயே தாவா "சி" அட்டவணைச் சொத்து எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு சொந்தமானது என்றும், எதிர்மனுதாரர்களின் அனுபவத்தில் உள்ளது என்றும் குறிப்பிட்டு கூறப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தாவா "சி" அட்டவணைச் சொத்தில் 20.12.2019 அன்று ஆக்கிரமித்து அதில் ஆழ்கிணறு மோட்டார், ஆழ்கிணறு பைப் பாய்ண்ட்டோ, சன்ஷேடுகளோ மற்றும் சந்தில் வழியோ எதிர்மனுதாரர்கள் ஏற்படுத்தவில்லை. மாறாக ஏற்கனவே தாவா "சி" அட்டவணைச் சொத்து எதிர்மனுதாரர்களின்

வசத்திலும், அனுபவத்திலும் இருந்ததனால் அதில் நீர்மூழ்கி மோட்டார் பைப் பாய்ண்ட் மற்றும் நீர் இறைக்கும் மின் மோட்டாரும், எதிர்மனுதாரர்களின் வடக்கு தெற்காக அமைந்துள்ள மேற்குபுற தாய்சுவற்றில் மேற்படி "சி" அட்டவணை சொத்தான சந்து பகுதியை பார்த்த வாக்கில் சன்ஷேடுகளை கீழ்தள மாடி வீட்டிலும் மற்றும் மேல்தள மாடி வீட்டிலும் அமைத்துள்ளனர். மேலும் தாவா "சி" அட்டவணை சொத்தான சந்தை பயன்படுத்துவதற்காக மேற்கு பார்த்த திறப்பு ( கதவு ) ஒன்றை மேற்படி "சி" அட்டவணை சொத்தை பயன்படுத்துவதற்காக எதிர்மனுதாரர்கள் ஏற்படுத்தியுள்ளார்கள். மேற்படி சந்தான "சி" அட்டவணை சொத்தை எதிர்மனுதாரர்கள் பயன்படுத்துவதற்கு வசதியாக உள்பக்கமாக திறக்கக்கூடிய மேற்குபார்த்த திறப்பு ( கதவு ) ஒன்றை எதிர்மனுதாரர்கள் ஏற்படுத்தியுள்ளனர். தாவா "சி" அட்டவணை சொத்தான சந்து பகுதி எதிர்மனுதாரர்களின் வசத்திலும், அனுபவத்திலும் இருப்பதால் இதன் முகப்பில் எதிர்மனுதாரர்கள் கிரில் கேட் வைத்து எதிர்மனுதாரர்கள் பயன்படுத்துவதற்காக அந்த கிரில் கேட்டை வைத்துள்ளனர். தாவா "சி" அட்டவணை சந்து பகுதி எதிர்மனுதாரர்களுக்கு உரிமையானது அவர்களது அனுபவத்தில் உள்ளது என்பதை காண்பிக்கக்கூடிய 5 புகைப்படங்கள் மற்றும் சி.டி. தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அந்த புகைப்படங்களிலிருந்து தாவா "சி" அட்டவணைச் சொத்து எதிர்மனுதாரர்களின் அனுபவத்தில் உள்ளது என்பது தெளிவாகும். எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள புகைப்படங்கள் அனைத்தும் 22.07.2019 அன்று எடுக்கப்பட்டுள்ளன. இந்த மனுவில் எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் கடந்த 20.12.2019 அன்று மனுதாரர்கள் ஊரில் இல்லாதபோது ஆக்கிரமித்துள்ளனர் என்று இந்த மனுவிற்காகவும், இந்த இடைமனுமூலம் செயல் உறுத்துக் கட்டளை பாரிகாரத்தை புகுத்துவதற்காகவும் மனுதாரர்களால் கற்பனையான இந்த வழக்கில் புதிய வழக்குமூலத்தை ஏற்படுத்துவற்காகவும் சொல்லப்படும் கற்பனையானதாகும். தாவா "சி" அட்டவணைச் சொத்தைப் பொறுத்து உரிமைமூலமோ மற்றும் அனுபவமோ எந்த ஒரு காலத்திலும் மனுதாரர்கள்/ வாதிகளுக்கு எதிர்மனுதாரர்களுக்கு எதிராக இல்லை என்பதால் தாவா "சி" அட்டவணைச் சொத்தினைப்பொறுத்த செயல் உறுத்துக் கட்டளை பரிகாரத்திற்காக வழக்குரையை திருத்தம் செய்ய முடியாது. மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள பதில் எதிர்வழக்குரையில் தாவா "சி" அ ட்டவணைச் சொத்தை எந்த தேதியில் எதிர்மனுதாரர்கள் ஆக்கிரமித்தார்கள் என்று குறிப்பிட்டு கூறாமல் பொத்தம் பொதுவாக எந்த தேதியும் குறிப்பிட்டு கூறாமல் இவ்வழக்கு தாக்கல் செய்த பிறகு சந்து பகுதியை வாதிகள் ஊரில் இல்லாத சமயத்தில் குடிநீர் போர்வெல் பைப் பாய்ண்ட் அதில் நீர்மூழ்கி மின்மோட்டார் அமைத்துவிட்டார்கள் என்று பொய்யாக கூறிவிட்டு தற்போது இந்த இடைமனுவில் மட்டும் 20.12.2019 அன்று "சி" அட்டவணை சொத்தில் மேற்கண்ட அமைப்பை எதிர்மனுதாரர்கள் ஏற்படுத்தவிட்டனர் என

மனுதாரர்கள் முன்னுக்குப் பின் முரணாக இவ்வழக்கில் கட்சி செய்துள்ளதால் அந்த காரணத்திற்காகவும் இந்த மனு தள்ளுபடிக்கு அருகதையாக உள்ளது. மனுதாரர்களுக்கு தாவா "சி" அட்டவணைச் சொத்தைப்பொறுத்து எந்த உரிமை மூலமும் இல்லாததால் தாவா "சி" அட்டவணைச் சொத்தான சந்து பகுதியை எதிர்மனுதாரர்களிடமிருந்து வசம் கோராமல் உரிமைமூலம் இல்லாததை மறைத்தே தாவா வழக்கில் புதியதாக தற்போது செயல் உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி வழக்குரையை திருத்த வேண்டுமென்று தூய கரங்களின்றி மனுதாரர்கள் இம்மனுவைத் தாக்கல் செய்துள்ளனர்.எனவே இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

4. <u>இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை</u>

மனுதாரர்கள்/வாதிகள் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கதா?

5. இம்மனுவில் மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. எதிர்மனுதாரர்கள் தரப்பில் எ.ம.சா.ஆ.1 சான்றாவணம் குறியிடப்பட்டது. மனுதாரர்கள் தரப்பில் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

6. <u>தீர்வு</u>

மனுதாரர்கள் தரப்பில் தாவா "சி" அட்டவணைச் சொத்தில் உள்ள சந்துப்பகுதி மனுதாரர்கள்/வாதிகளுக்கு அனுபவமும், உரிமையும் உள்ளது என்றும், தாவா "சி" அட்டவணைச் சொத்தில் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எந்தவித உரிமையும், அனுபவமும் இல்லை என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மனுதாரர்கள் இருவரும் மிகவும் வயதானவர்கள், மூத்த குடிமக்கள் என்றும், மனுதாரர்களின் மகன் சென்னையில் இருப்பதால் அங்கு சென்றுவிடுவார்கள் என்றும், மனுதாரர்கள் சென்னை சென்றபொழுது 20.12.2019 அன்று எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதி "சி" அட்டவணைச் சொத்தில் ஆழ்துளைகிணறு பைப்பை பூமியில் அமைத்து மின்மோட்டார் பொறுத்தியுள்ளனர் என்றும், மேலும் அதிலிருந்து தண்ணீர் எடுக்க பிஸ்டன் பம்ப் மேல் பகுதியில் அமைத்துள்ளனர் என்றும், இவைகளை தவிர எதிர்மனுதாரர்கள் புதிய வீட்டின் முதல் மற்றும் தரை தளத்தில் சன்ஷேட் அமைத்து உள்ளதால் முதல் தளத்தில் 5 சன்ஷேடுகளும், தரை தளத்தில் 4 சன்ஷேடுகளும் மனுதாரர்கள்/வாதிகளின் தாவா "சி" அட்டவணைச் சந்து பகுதியின் மேல் சுமார் 2x5 அடி அளவுகள் கொண்ட சன்ஷேடுகளை நீட்டி மனுதாரர்களின் சந்து பகுதியின் மேல் அமைத்துள்ளனர் என்றும், இது சட்டப்படி தவறு என்றும், மேலும் எதிர்மனுதாரர்கள் தாவா "சி" அட்டவணைச் சொத்திற்கு கிழக்கில் அவர்களது வீட்டின் கொல்லைப்பகுதியில் சுவரில் வடக்கு-தெற்காக ஒரு வழி சுமார் 4- 1/2 x 3 அடி அளவு உள்ள புதிய

கேட் அமைத்துள்ளனர் என்றும், இது சந்து பகுதி தாவா "சி" அட்டவணை சொத்திற்கு வரும் வாய்ப்பாக உள்ளது என்றும், சந்து பகுதி "சி" அட்டவணை சொத்தில் எதிர்மனுதாரர்களுக்கு எந்தவித உரிமையும், அனுபவமும் இல்லாததால் இந்த புதிய கேட்டை மனுதாரர்களின் சந்துப்பகுதியில் அமைப்பதற்கு எதிர்மனுதாரர்களுக்கு உரிமை இல்லை என்றும், ஆகையால் வழக்கு நிலுவையில் இருக்கும்போது எதிர்மனுதாரர்கள் தாவா "சி" அட்டவணைச் சொத்தில் தற்காலம் ஏற்படுத்திய அமைப்புகளையும் அடைத்து, ஆழ் கிணறு மோட்டார் மற்றும் மேல் மோட்டார், சந்துவழி இவைகளை எடுக்க வேண்டுமென செயல்உறுத்துக்கட்டளை எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது பரிகாரம் கேட்பதற்காக இம்மனுவில் கண்டுள்ளவாறு வழக்குரையை திருத்தம் செய்ய வேண்டியது அவசியமானது என்றும், அதன் பொருட்டு மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனுவை அனுமதிக்க வேண்டும் என்றும் மனுதாரர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதிட்டார்.

7. எதிர்மனுதாரர்கள் தரப்பில் அசல் வழக்கில் 2-ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையிலேயே தாவா "சி" அட்டவணைச் சொத்து எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு சொந்தமானது என்றும், எதிர்மனுதாரர்களின் அனுபவத்தில் உள்ளது என்றும் குறிப்பிட்டு கூறப்பட்டுள்ளது என்றும், ே எதிர்மனுதாரர்கள் தாவா "சி" அட்டவணைச் சொத்தில் 20.12.2019 அன்று ஆக்கிரமித்து அதில் ஆழ்கிணறு மோட்டார், ஆழ்கிணறு பைப் பாய்ண்ட்டோ, சன்ஷேடுகளோ மற்றும் சந்தில் வழியோ எதிர்மனுதாரர்கள் ஏற்படுத்தவில்லை என்றும், மாறாக ஏற்கனவே தாவா "சி" அட்டவணைச் சொத்து எதிர்மனுதாரர்களின் வசத்திலும், அனுபவத்திலும் இருந்ததனால் அதில் நீர்மூழ்கி மோட்டார் பைப் பாய்ண்ட் மற்றும் நீர் இறைக்கும் மின் மோட்டாரும், எதிர்மனுதாரர்களின் வடக்கு தெற்காக அமைந்துள்ள மேற்குபுற தாய்சுவற்றில் மேற்படி "சி" அட்டவணை சொத்தான சந்து பகுதியை பார்த்த வாக்கில் சன்ஷேடுகளை கீழ்தள மாடி வீட்டிலும் மற்றும் மேல்தள மாடி வீட்டிலும் அமைத்துள்ளனர் என்றும், மேலும் தாவா "சி" அட்டவணை சொத்தான சந்தை பயன்படுத்துவதற்காக மேற்கு பார்த்த திறப்பு ( கதவு ) ஒன்றை மேற்படி "சி" அட்டவணை சொத்தை பயன்படுத்துவதற்காக எதிர்மனுதாரர்கள் ஏற்படுத்தியுள்ளார்கள் என்றும், மேற்படி சந்தான "சி" அட்டவணை சொத்தை எதிர்மனுதாரர்கள் பயன்படுத்துவதற்கு வசதியாக உள்பக்கமாக திறக்கக்கூடிய மேற்குபார்த்த திறப்பு ( கதவு ) ஒன்றை எதிர்மனுதாரர்கள் ஏற்படுத்தியுள்ளனர் என்றும், தாவா "சி" அட்டவணை சொத்தான சந்து பகுதி எதிர்மனுதாரர்களின் வசத்திலும், அனுபவத்திலும் இருப்பதால் இதன் முகப்பில் எதிர்மனுதாரர்கள் கிரில் கேட் வைத்து எதிர்மனுதாரர்கள் பயன்படுத்துவதற்காக அந்த கிரில் கேட்டை வைத்துள்ளனர் என்றும், தாவா "சி" அட்டவணை சந்து பகுதி எதிர்மனுதாரர்களுக்கு உரிமையானது

அவர்களது அனுபவத்தில் உள்ளது என்பதை காண்பிக்கக்கூடிய 5 புகைப்படங்கள் மற்றும் சி.டி. தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்றும், அந்த புகைப்படங்களிலிருந்து தாவா "சி" அட்டவணைச் சொத்து எதிர்மனுதாரர்களின் அனுபவத்தில் உள்ளது என்பது தெரியவரும் என்றும், எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள புகைப்படங்கள் அனைத்தும் 22.07.2019 அன்று எடுக்கப்பட்டுள்ளன என்றும், இந்த மனுவில் எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் கடந்த 20.12.2019 அன்று மனுதாரர்கள் ஊரில் இல்லாதபோது ஆக்கிரமித்துள்ளனர் என்று இந்த மனுவிற்காகவும், இந்த இடைமனுமூலம் செயல் உறுத்துக் கட்டளை பாரிகாரத்தை புகுத்துவதற்காகவும் மனுதாரர்களால் கற்பனையான இந்த வழக்கில் புதிய வழக்குமூலத்தை ஏற்படுத்துவற்காகவும் சொல்லப்படும் கற்பனையான சங்கதிகள் என்றும், தாவா "சி" அட்டவணைச் சொத்தைப் பொறுத்து உரிமைமூலமோ மற்றும் அனுபவமோ எந்த ஒரு காலத்திலும் மனுதாரர்கள்/ வாதிகளுக்கு எதிர்மனுதாரர்களுக்கு எதிராக இல்லை என்பதால் தாவா "சி" அட்டவணைச் சொத்தினைப்பொறுத்த செயல் உறுத்துக் கட்டளை பரிகாரத்திற்காக வழக்குரையை திருத்தம் செய்ய முடியாது என்றும், மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள பதில் எதிர்வழக்குரையில் தாவா "சி" அட்டவணைச் சொத்தை எந்த தேதியில் எதிர்மனுதாரர்கள் ஆக்கிரமித்தார்கள் என்று குறிப்பிட்டு கூறாமல் பொத்தம் பொதுவாக எந்த தேதியும் குறிப்பிட்டு கூறாமல் இவ்வழக்கு தாக்கல் செய்த பிறகு சந்து பகுதியை வாதிகள் ஊரில் இல்லாத சமயத்தில் குடிநீர் போர்வெல் பைப் பாய்ண்ட் அதில் நீர்மூழ்கி மின்மோட்டார் அமைத்துவிட்டார்கள் என்று பொய்யாக கூறிவிட்டு தற்போது இந்த இடைமனுவில் மட்டும் 20.12.2019 அன்று "சி" அட்டவணை சொத்தில் மேற்கண்ட அமைப்பை எதிர்மனுதாரர்கள் ஏற்படுத்தவிட்டனர் என மனுதாரர்கள் முன்னுக்குப் பின் முரணாக இவ்வழக்கில் கட்சி செய்துள்ளதால் அந்த காரணத்திற்காகவும் இந்த மனு தள்ளுபடிக்கு அருகதையாக உள்ளது என்றும், மனுதாரர்களுக்கு தாவா "சி" அட்டவணைச் சொத்தைப்பொறுத்து எந்த உரிமை மூலமும் இல்லாததால் தாவா "சி" அட்டவணைச் சொத்தான சந்து பகுதியை எதிர்மனுதாரர்களிடமிருந்து வசம் கோராமல் உரிமைமூலம் இல்லாததை மறைத்தே தாவா வழக்கில் புதியதாக தற்போது செயல் உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி வழக்குரையை திருத்த வேண்டுமென்று தூய கரங்களின்றி மனுதாரர்கள் இம்மனுவைத் தாக்கல் செய்துள்ளனர் என்றும், எனவே இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதிட்டார்.

8. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. வழக்கு கோப்புகள் பரிசீலிக்கப்பட்டன. வழக்கின் கோப்புகளை பரிசீலனை செய்ததில் அசல் வழக்கை மனுதாரர்கள்/ வாதிகள் தாவா "சி" அட்டவணைச் சொத்தினைப் பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல்

செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. மனுதாரர்கள்/வாதிகள் இம்மனுவில் தாவா "சி" அட்டவணைச் சொத்தினைப் பொறுத்து நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யதுள்ள இந்த வழக்கு நிலுவையில் இருக்கும்போது 20.12.2019 அன்று மனுதாரர்கள் ஊரில் இல்லாத போது தாவா "சி" அட்டவணைச் சொத்தில் எதிர்மனுதாரர்கள் ஆழ்துளைகிணறு அமைத்தும், ஆழ்துளைகிணறு பைப் பொறுத்தியும், அதன் மேல் ஒரு மோட்டார் பொறுத்தியும், தாவா "சி" அட்டவணைச் சொத்தின் மேல் 2x5 அளவுகள்கொண்ட சன்ஷேடுகளை முதல்தளத்திலும், தரைதளத்திலும் நீட்டிக்கட்டியுள்ளனர் என்றும், தாவா "சி" அட்டவணைச் சொத்திற்கு கிழக்கில் கொல்லை பகுதியில் வடக்கு-தெற்கில் 4-1/2 x3 அளவுள்ள புதிய கேட் அமைத்துள்ளனர் என்றும், எனவே தாவா "சி" அட்டவணைச் சொத்தில் எதிர்மனுதாரர்கள் அமைத்துள்ள ஆழ்துளைகிணறு, மோட்டார், பைப் லைன் ஆகியவற்றையும், தாவா "சி" அட்டவணைச் சொத்தில் எதிர்மனுதாரர்கள் அடைத்துள்ள கேட்டை அகற்ற செயல் உறுத்துக்கட்டளை பரிகாரம் கோருவதற்காக இம்மனுவில் கண்டுள்ள வழக்குரையை திருத்தம் செய்ய வேண்டுமென இம்மனுவில் கோரியுள்ளனர்.

9. எதிர்மனுதாரர்கள் 20.12.2019 அன்று தாவா "சி" அட்டவணைச் சொத்தில் ஆக்கிரமித்து ஆழ்துளைகிணறு, ஆழ்துளைகிணறு குழாய்களோ, சன்ஷேடுகளோ அமைக்கவில்லை என்றும், தாவா "சி" அட்டவணைச் சொத்தில் புதிய கேட் அமைக்கவில்லை என்றும், தாவா "சி" அட்டவணைச் சொத்து எதிர்மனுதாரர்களின் வசத்திலும், அனுபவத்திலும் இருந்ததினால் நீர்மூழ்கி மோட்டார் மற்றும் பைப் லைன் அமைத்தும், "சி" அட்டவணை சொத்தான சந்து பகுதியைப்பார்த்து முதல்தளத்திலும், தரை தளத்திலும் சன்ஷேடு அமைத்துள்ளனர் என்றும், தாவா "சி" அட்டவணைச் சொத்தின் அமைப்பைக் காண்பிக்கக்கூடிய எ.ம.சா.ஆ.1 புகைப்படங்க்ள 22.07.2019 அன்று எடுக்கப்பட்டுள்ளன என்றும், 20.12.2019 அன்று எதிர்மனுதாரர்கள் தாவா "சி" அட்டவணைச் சொத்தில் எவ்விதமான ஆழ்துளை கிணறு,மோட்டார், பைப் லைன் அமைக்கவில்லை என்றும், தாவா "சி" அட்டவணைச் சொத்தில் மனுதாரர்களுக்கு எவ்விதமான உரிமைமூலமும் இல்லாததால் அதனைப்பொறுத்து எதிர்மனுதாரர்களிடமிருந்து வசம் கோராமல், தற்போது செயல் உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி பிராதை திருத்தம் செய்யவேண்டுமெனக்கோரியுள்ள் இம்மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் எதிருரையில் கூறியுள்ளார்.

10. இந்த வழக்கின் வழக்குரையில் தாவாச்சொத்துக்கள் "ஏ" "பி" மற்றும் "சி" அட்டவணைச் சொத்துக்கள் காண்பித்திருந்தாலும், தாவா "சி" அட்டவணைச் சந்துப்பகுதியைப்பொறுத்து மட்டுமே இவ்வழக்கில் வாதிகள் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியுள்ளனர், இந்த வழக்கு

தாக்கல் செய்த பின்னர் எதிர்மனுதாரர்கள் தாவா "சி" அட்டவணைச்சொத்தில் உள்ள ஆழ்துயை கிணறு, பைப்லைன், மோட்டர் மற்றும் புதிய கேட் ஆகியவற்றை அமைத்துவிட்டனர் என்றும், அதனை அகற்றுவதற்காக செயல் உறுத்துக் கட்டளை பரிகாரம் கோருவதற்காக இம்மனுவில் கண்டுள்ளவாறு வழக்குரையைத் திருத்தம் செய்ய வேண்டுமென இம்மனுவில் கோரியுள்ளனர். இவ்வழக்கு விசாரணை தொடங்காத நிலையில் உள்ளதாலும், இது விசாரணை நீதிமன்றமாக இருப்பதாலும் மனுதாரர்கள் இம்மனுவில் கோரியுள்ளவாறு செயல் உறுத்துக்கட்டளை பரிகாரம் கோருவதற்காக பரிகாரம் மற்றும் அது தொடர்புடைய பொருமானம் மற்றும் நீதிமன்றக்கட்டணம், நீதிமன்றக்கட்டண சட்டம் ஆகியவற்றை வழக்குரையில் திருத்தம் செய்ய அனுமதித்து அதன்பின் வழக்கில் தீர்வு காண்பதே சரியான தீர்வாக இருக்கும் என்பதுடன், அது ஒரே பொருண்மையின் அடிப்படையில் பல்வேறு வழக்கு நடவடிக்கைகள் ஏற்படுவதை தடுக்கும் ( Multiciplity of proceedings) என்பதாலும், மனுதாரர்களுக்கு ஒரு வாய்ப்பளிக்கும் விதமாக இந்த மனுவில் கோரியுள்ளவாறு வழக்குரையை திருத்தம் செய்ய கோரியுள்ள இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுவதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மனுவின் தன்மை கருதி மனுவிற்கான செலவுத்தொகையை தரப்பினர்கள் அவரவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து இம்மனுவின் பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

முடிவில் இம்மனுவானது செலவுத்தொகையின்றி அனுமதிக்கப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் நேரடியாகத் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைதிருத்தம் செய்யப்பட்டு 2022ம் ஆண்டு ஜுலை மாதம் 14-ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி.
(முழுக்கூடுதல் பொறுப்பு )

**பின் இணைப்பு**

**மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்** - இல்லை-

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்** -இல்லை-

**மனுதாரர்கள் தரப்பு சான்றாணங்கள்** - இல்லை-

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்**

எ.ம.சா.ஆ.1 - சி.டி.யுடன் கூடிய புகைப்படங்கள் ஐந்து

மா.உ.நீ.(மு.கூ.பொ)